# துறையூர் நகராட்சி

2021ஆம் வருடம் ஜூலை மாதம் 28.07.2021 புதன் கிழமை (தமிழ் பிலவ வருடம் ஆடி மாதம் நாள்.12) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 28.07.2021 | **01** | மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் **25.07.2021** அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட அறிவுரைகளுக்கு இணங்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**14753/2021**/குவ2, நாள்.**26.07.2021**–ல் துறையூர் நகராட்சியில் சிறப்பு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் அமல்படுத்திட முன்மொழிவுகள் அனுப்பிடக்கோரி அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க மேற்படி திட்டத்திற்கான முன்மொழிவுகள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>துறையூர் நகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் குடிநீர் விநியோகம் **1970**ல் தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்தபோது அமைக்கப்பட்டிருந்த **4.50** இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் (தெப்பக்குளம் மற்றும் பெரம்பலூர் ரோடு) பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரியில் அமைக்கப்பட்டிருந்த ஆழ்குழாய் கிணறுகளை ஆதாரமாக கொண்டு செயல்பட்டு வந்தது. பின்னர் **2001**ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் துறையூர் நகரம் **4** பேரூராட்சிகள் மற்றும் **98** வழியோர கிராமங்களை உள்ளடக்கிய கூட்டுக்குடிநீர் திட்டத்தில் (CWSS) துறையூருக்கென **3.12**MLD அளவிலான குடிநீர் வழங்கிட வடிவமைத்து **2.00** இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, **8.00** இலட்சம் கொள்ளளவுடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி ஏற்கனவே இருந்த பழைய குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் தற்போது வரை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.<br>மேலும், **2001** (CWSS) கூட்டுக்குடிநீர் திட்டம் அதன் இறுதி வடிவமைப்பு கட்டம் **2020**ன் படி துறையூர் நகருக்கென வழங்கப்பட வேண்டிய **3.12** MLD அளவு குடிநீரில் சராசரியாக **2.40** MLD அளவு குடிநீர் மட்டுமே கிடைக்கப்பெற்று வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்டு வரும் குடிநீரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய | தீர்மான எண்: 711<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதான குழாய்களின் வயது முதிர்வு காரணமாக ஏற்படும் உடைப்பு, மோட்டார் பழுது, தலைமை நீரேற்று நிலைய பராமரிப்பு, மின்வாரிய பராமரிப்பு மற்றும் அவ்வப்போதைய மின்தடை காரணமாகவும், 1970ல் அமைக்கப்பட்ட 2 எண்ணிக்கை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் அளவுக்கேற்பவும் அப்போதைய தேவைக்கேற்பவும் வடிவமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்களின் ஆயுட்காலத்தை தாண்டியும் நீண்ட நெடுங்காலமாக பயன்பாட்டில் உள்ளதுடன் தற்போதைய தேவைக்கேற்ப அளவில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் அளவுகள் இல்லாததால் குடிநீர் விநியோகம் 3 தினங்களிலிருந்து 9 தினங்கள் வரையிலான கால இடைவெளியில் உள்ளது.<br>ஆகவே, துறையூர் நகரின் 2051 ஆம் ஆண்டிற்கான உச்சபட்ச (Ultimate) மக்கள்தொகைக்கேற்ப கூடுதல் நீராதாரத்தை ஏற்படுத்திடவும் தேவைகேற்ப பொறுத்தமான இடங்களில் கூடுதல் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து ஏற்கனவே உள்ள பகிர்மான குழாய்களுக்கு பதிலாக புதிய பகிர்மான குழாய்கள் வடிவமைப்பிற்கு ஏற்ப மாற்றிடவும், விரிவாக்கப்பகுதிகளில் தேவைக்கேற்ப புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் புதிதாக பகிர்மான குழாய்கள் அமைத்து வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளை உள்ளடக்கிய சிறப்பு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் ஏற்படுத்துவதன் மூலம் துறையூர் நகரின் நீண்டகால குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இயலும் என்பதால் நீண்டகாலமாக நிலவி வரும் துறையூர் நகர மக்களின் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்திடும் விதமாக மேற்கண்ட கட்டமைப்புகளுடன் கூடிய சிறப்பு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தினை செயல்படுத்தி சீரான குடிநீர் விநியோகம் அன்றாடம் மேற்கொள்ள ஏதுவாக உரிய ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயார் செய்திடவும் மேற்படி ஆய்வு பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அல்லது தனிநபர் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ள ஒப்புதல் வேண்டியும் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2195/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

//உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி

# துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் ஜூலை மாதம் 30.07.2021 வெள்ளி கிழமை ( தமிழ் பிலவ வருடம் ஆடி மாதம் நாள்.14) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| : **மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்** | | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|---|
| 30.07.2021 | **01** | ஆணையர் அவர்களது ஜூலை மாதம் 2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : பதிவு செய்யலாம் | தீர்மான எண்:712<br>பதிவு செய்யப்பட்டது. |
| 30.07.2021 | **02** | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் மற்றும் கடைகளுக்கான குத்தகை உரிமம் 28.07.2021 அன்று நடைபெற பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண் 7ல் இருந்த கடை எண் 25 பொது ஏலத்தில் விடப்பட்டது போக கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:713<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ, எ ண். | குத்தகை இனம் |
|---|---|
| 1 | துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். |
| 2 | நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம் |

| | |
|---|---|
| 3 | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாபேருந்து நிலையத்தில் உள்ள நவீனகட்டணம் கழிப்பிடம் உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம் |
| 4 | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான தினசரிகாய்கனி மார்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கு செல்லும் நடைபாதை நீங்கலாக பின்பக்கம் (கீழக்கே) உள்ள் காலியிடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் |
| 5 | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான சுவாமி நாதன் தினசரி மார்க்கெட் கடைகள் எண்கள், 15, 16, 17,18, 22, 34, 42, 43, 44 மற்றும் 45-க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்-தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) |
| 6 | துறையூர், நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை கடைகள் எண்கள் .2,3,4,6,8,9,10,11, 12,13,14, 15, 16 மற்றும் 17-க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) |
| 7 | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்துநிலையம் மற்றும் பழைய நகராட்சி வளாகம் புதிய கடை எண்கள்.2,4,5,6,7,9,10,18, மற்றும் 23 -க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) |

(**ந.க.எண்**.4077/2020/**அ**1)

**அலுவலககுறிப்பு**

மேற்காணும் குத்தகை இனங்களின் வரிசைஎண் 1 ,2, 3, மற்றும் 4

<table>
<tr><td></td><td></td><td>நகராட்சி பணியாளர்களை கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. வரிசை எண் 3 ல் குத்தகைதார் அனுபவித்து வருகிறார்கள் 5,6 மற்றும் 7-ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகததால் கேட்பு இல்லை மேற்காணும் வரிசை 1 முதல் 7 வரை உள்ள இனங்கள் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>30.07.2021</td><td>03</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்துநிலையம் மற்றும் பழைய நகராட்சி வளாக மதிய கடை எண் 25-க்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை 12.07.2021- ம் தேதி வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி 28.07.2021-ம் தேதியில் நடைபெறும் பொது ஏலத்திற்கு மேற்படி கடையை அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு கீழ்கானும் இரண்டு நபர்கள் ஏல காப்புக் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்துகொள்ள மனு 27.07.2021-ம் தேதியில் சமப்பித்துள்ளார்கள். அதன் விவரம்.
<table>
<tr><td>வ.எ ண்</td><td>ஏலதாரர் பெயர்</td><td>பொது ஏலத்தில் 25-ம் எண் கடைக்கு மாதவாடகைக்கான ஏலக்கேள்வி விவரம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.கு.ஞானசேகர்</td><td>ரூ.33600/-</td></tr>
<tr><td>2</td><td>திரு.பா.பிரஹதிஸ்வரன்</td><td>ரூ.33500/-</td></tr>
</table>
28.07.2021-ம் தேதியில் நடைப்பெற்ற பொதுஏலத்தில் திரு.கு.ஞானசேகர் என்பவரின் ஏலக்கேள்வி ரூ 33,600/- யானது திரு.பா.பிரஹதிஸ்வரன் என்பவரின் ஏலக்கேள்வியை விட உயர்ந்தபட்சமாக உள்ளது, ஒப்பந்தப்புள்ளி ஏதுவும் பெறப்படவில்லை. மற்றும் அன்றைய தினத்தின் திரு.கு. ஞானசேகர் என்பவரின் உயர்த்தப்பட்ட ஏலக்கேள்வி ரூ.33,600/-ஐ ஏற்று மேற்படி கடை எண் 25-ஐஅன்னாருக்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்</td><td>தீர்மான எண்:714<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.07.2021</td><td>04</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கான 2023-2024ம் ஆண்டு வரைக்கான உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படி அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு ஆண்டு குத்தகை இனம் பேருந்து</td><td>தீர்மான எண்:715<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் தரைகடை குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,18, 22,34, 42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் ,வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9,10,18,23 மற்றும் 25 கடைகளுக்கும் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 28.07.2021-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினமணி, திருச்சி பதிப்பு</td><td>14.07.2021</td><td>ரூ.14,642/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Bright Advertising , Chennai, நிறுவனம் ரூ.14,642/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
ந.க.எண்.4077/2020/அ1<br>
அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.07.2021</td>
<td>05</td>
<td>இந்நகர்மன்ற தீர்மானம் எண்.525 நாள்.30.09.2020ல் துறையூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழைகள் 2020ஐ சமாளிக்கும் வண்ணம் தேவையான மணல் மூட்டைகள் தயாரித்து கையிருப்பு வைத்துக்கொள்ளல், மழை வெள்ள நேரத்தில் தேங்கிய மழைநீரை வடிகட்டும் முகமாக ஆயில் இன்ஜின், ஜெனரேட்டர் வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து தயார்</td>
<td>தீர்மான எண்:716<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நிலையில் இருத்தல், பணியாளர்களுக்கு தேவையான Torch, Shoe கொள்முதல் செய்து கொள்ளுதல், மரம் அறுக்கும் Power shaw 3 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் மற்றும் இதர தேவையான பொருட்கள் பொறியியல் பிரிவின் மூலம் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் நாள்.23.10.2020ல் கோரப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வராததால் பணியினை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க வேண்டி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் நாள்.23.10.2021ல் அனுமதி பெற்று நாள்.26.10.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தந்த திரு.K.சரவணன் ஒப்பந்ததாரரின் விலைவிகிதத்தை ஏற்று வேலை உத்திரவு வழங்கி செலவினம் ரூ.292447/-ல் பணி முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும். (ந.க.எண்.1799/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 30.07.2021 | **06** | துறையூர் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் இதர உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு காலம் 31.07.2021 தேதியுடன் முடிவடைகிறது. மேலும் மேற்கண்ட நிறுவனம் கடந்த பராமரிப்பு விலை விகிதத்திலேயே ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு செய்து தர விருப்பம் தெரிவித்துள்ளதால் Sumaraj IT Solution நிறுவனம் ஒரு வருட (01.08.2021 முதல் 31.07.2022 வரை) காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ள அனுமதி மற்றும் அதற்கான தொகை ரூ.88,205/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2937/2016/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பராமரிப்பு தொகை ரூ.88,205/- பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:717<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>30.07.2021</td><td>07</td><td>துறையூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN45X7856 மற்றும் TN45V0856 ஆகிய இரு வாகனங்களுக்கும் 2021-2021ம் ஆண்டு காப்பீட்டு தொகை செலுத்த வேண்டும். TN45X7856 ரூ.30,696/- மற்றும் TN45V0856 ரூ.18134/- மொத்தம் ரூ.48,830/-ஐ UNITED INDIA INSURANCE COMPANY LIMITED என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1263/2013/எச்1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>தீர்மான எண்:718<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.07.2021</td><td>08</td><td>இந்நகராட்சியில் 2020-21-ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்படும் Income Tax (Staff & Contractor) மற்றும் GST பிடித்தங்கள் உரிய தலைப்பில் / அரசு கணக்கில் செலுத்திய விபரம் Online வழியாக சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் Pan/GST கணக்கிற்கு E filing செய்யும் பணி Alayam Associated நிறுவனம் வழியாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும் E Filing சான்றுகளும் (TDS, GST 7A) Download செய்தும் பெறப்பட்டது. ஆதலால் மேற்படி நிறுவனம் ரூ.36500/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.418/2021/பி1)<br>அலுவலக குறிப்பு: மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலம்</td><td>தீர்மான எண்:719<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.07.2021</td><td>09</td><td>சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக Roc.No.20452/2020/LA3 நாள்.31.03.2021ன் படி துறையூர் நகராட்சிக்கு இரண்டாம் தவணை Tied Grant 15-வது நிதிக்குழுவில் ரூ.51,56,246/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>இந்நிதி ஒதுக்கீட்டினை கொண்டு நடுவணரசு வழிகாட்டு நெறிமுறைகளில் வகுத்துள்ளவாறு பின்வரும் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சம்)</th></tr>
<tr><td>1.</td><td>பயனற்ற ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளாக மாற்றுதல்.</td><td>5.00</td></tr>
</table></td><td>தீர்மான எண்:720<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>குதிரைக்குளம் நீர்நிலையினை புனரமைத்து மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்தல்.</td><td>10.00</td></tr>
<tr><td>3</td><td>தெப்பக்குளம் நீர்நிலையினை புனரமைத்து மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்தல்.</td><td>10.00</td></tr>
<tr><td>4</td><td>திறந்தவெளிக்கிணறுகளை தூர்வாரி, ஆழப்படுத்தி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்.</td><td>10.00</td></tr>
<tr><td>5</td><td>நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி இடங்களில் மியாவாக்கி குறுங்காடுகள் அமைத்தல்.</td><td>10.00</td></tr>
<tr><td>6</td><td>பெரியார் நகர் மற்றும் சொரத்தூர் சாலை உரக்கிடங்கில் உள்ள RRC மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்.</td><td>10.00</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>55.00</td></tr>
</table>
ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை விட ஏற்படக்கூடிய கூடுதல் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2224/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.07.2021</td>
<td>10</td>
<td>தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் துறையூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு நோயாளிகளுடன் வரும் உறவினர்கள் தங்குவதற்கு ஏதுவாக மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் கட்டிடம் (Special Shelter) கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.6972/- மட்டும் Bright Advertising, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின்</td>
<td>தீர்மான எண்:721<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண். 2585/2019/இ1)<br>அலுவலக குறிப்பு : மேற்படி செலவினம் இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.07.2021</td>
<td>11</td>
<td>தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் துறையூர் அரசு மருத்துவமனை சிகிச்சைக்கு நோயாளிகளுடன் வரும் உறவினர்கள் தங்குவதற்கு ஏதுவாக மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு உறைவிடம் கட்டிடம் (Special Shelter) கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.670 நாள்.10.05.2021-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 09.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 10.91% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 4.94% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.94% கூடுதலாக உள்ளது மற்றும் வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக இருப்பதாலும் ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண். 2585/2019/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மதிப்பீட்டை விட 4.94% கூடுதல் விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் திரு.T.இந்திரஜித் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒன்றாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:722<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.07.2021</td>
<td>12</td>
<td>துறையூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் 11 எண்ணிக்கை Battery Operated Vehicle வாகனங்கள் பழுது நீக்கம் செய்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.8.69 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி நாள்.10.07.2021ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணிக்கு 13.07.2021 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>Jayam Eஷுments & Engineering,<br>Dharapuram.</td><td>ரூ.868568/-</td></tr>
<tr><td>2</td><td>DS Engineering,<br>Erode.</td><td>ரூ.1000688/-</td></tr>
<tr><td>3</td><td>Una’s & Rickshaw,<br>Dharapuram</td><td>ரூ.973936/-</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் உள்ள Jayam Eஷுments & Engineering, Dharapuram அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்திரவு வழங்கி செலவினம் தொகை ரூ.868568/-க்கு இந்நகராட்சி பொதுநிதியில் பணி முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.1967/2021/இ1<br>
அலுவலக குறிப்பு :<br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td>
<td>தீர்மான எண்:723<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.07.2021</td>
<td>13</td>
<td>இவ்வலுவலக வேலை உத்தரவு ந.க.எண்.3644/2015/இ1, நாள்.21.01.2019 மூலம் சொரத்தூர் சாலை நகராட்சி உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டுள்ள குப்பைகளை உயிரி செயலாக்கத்தின் (Bio-Mining) மூலம் நிலத்தினை மீட்டெடுக்கும் பணியினை மேற்கொள்ள திரு.T.இந்திரஜித் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி, பணி உத்தரவிற்கான ஒப்பந்தகாலம் 20.01.2020 அன்று முடிவடைந்து இதுநாள்வரை பணியினை முற்றிலுமாக முடிக்காமல் காலம்</td>
<td>தீர்மான எண்:724<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>தாழ்த்துவதால் நிலம் மீட்புப் பணியானது காலதாமதப்பட்டு வருவதுடன் நிர்வாகத்திற்கு உயர் அலுவலர்களிடம் அவப்பெயர் ஏற்படவுள்ளது என்பதுடன் இத்திட்டப்பணியின் இலக்கினை உரிய காலத்தில் அடைந்திடவும் இயலவில்லை என்பதை குறிப்பிட்டு திட்டத்தின் படி(Action Plan) உடன் தயார் செய்து 24 மணி நேரத்திற்குள் இறுதியான செயலாக்க திட்டத்துடன் (Action Plan) எழுத்துப்பூர்வமான விளக்கமளிக்க கோரப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு.T.இந்திரஜித் கோவிட்-19, மழை, பணியாளர் பாதிப்பு காரணமாக பணியில் சுணக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து பணியினை 31.10.2021க்குள் முடித்து தருவதாக கோரி கால நீட்டிப்பு கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3644/2015/இ1)<br><br>அலுவலக குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.07.2021</td>
<td>14</td>
<td>துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பினை சரி செய்யவும் மற்றும் திடீர் உடைப்பினை சரி செய்யவும் மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.687 நாள்.31.05.2021-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 16.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது<br>.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 1.75% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.15% குறைவு</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:725<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.15% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1540/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.07.2021</td><td>15</td><td>துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.688 நாள்.31.05.2021-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 16.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr><tr><td>1</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 1.30% அதிகம்</td></tr><tr><td>2</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1541/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:726<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>30.07.2021</td>
<td>16</td>
<td>
கொரோனா நோய் (Covid-19) பெருந்தொற்று இரண்டாம் அலையின் காரணமாக எற்படக்கூடிய உயிரிழப்புகளால் உருவாகும் மனித பிரேதங்களை எரியூட்டுவதில் எற்படக்கூடிய அன்றாட நிகழ்வுகளை கண்காணிக்க மயானத்தில் உரிய கண்காணிப்பு கேமரா பொருத்தி தேவையான நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் உடன் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் Whatsapp குருஞ்செய்தியின் வாயிலாக 03-06-2021 அறிவுறைகள் வழங்கியதை தொடர்ந்து, துறையூர் நகராட்சி வார்டு எண்.01 ஆத்தூர் சாலையில் அமைந்துள்ள எரிவாயு தகனமேடை கட்டிடத்தில் கண்கானிப்பு கேமரா பொருத்த ஆகும் உத்தேச செலவீனம் ரூ 1,00,000/-க்கு தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி நாள்.03.06.2021ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணிக்கு 04.06.2021 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>ரூ.99896/-</td></tr>
<tr><td>2</td><td>தமிழ் கம்ப்யூட்டர்ஸ் &<br>சர்வயலன்ஸ் ,<br>திட்டக்குடி.</td><td>ரூ.97995/-</td></tr>
<tr><td>3</td><td>திரு.K.ராஜேஷ்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>ரூ.101012/-</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.2ல் உள்ள தமிழ் கம்ப்யூட்டர்ஸ் & சர்வயலன்ஸ் , திட்டக்குடி அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்திரவு வழங்கி செலவினம் தொகை ரூ.97993/-க்கு இந்நகராட்சி பொதுநிதியில் பணி முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1843/2021/இ1)
</td>
<td>தீர்மான எண்:727<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அலுவலக குறிப்பு :<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td><td></td></tr>
<tr><td>30.07.2021</td><td>17</td><td>துறையூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 18 கழிவறைகளில் மராமத்து பணிகள் செய்தல் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.668 நாள்.10.05.2021-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 16.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr><tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.05% குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.35 அதிகம்</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண்.1395/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:728<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.07.2021</td><td>18</td><td>துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் அலுவலக வாகனம் எண். TN48AQ1221 இயங்கி கொண்டிருந்த நிலையில் வாகனம் பழுதடைந்து உள்ளது. எனவே வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட Oxina Hyundai (Oxina Cars Pvt.Ltd.,) நிறுவனத்தின் மூலம் வாகனம் முழு ஆய்வு செய்து பழுதுகள் நீக்கம் செய்திட அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15-ன் கீழ் வாகனம் பழுது நீக்கம் செய்ய உண்டாகும் உத்தேச செலவுத்தொகை</td><td>தீர்மான எண்:729<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ரூ.50,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:2113/2021/இ1)<br>அ.கு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.07.2021 | **19** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளின் திறந்தவெளி மலம் கழித்தலை தடுக்கும் பொருட்டு 22 சமுதாய கழிவறைகள் இயங்கி வருகின்றது. சமுதாய கழிவறைகளின் நச்சுத் தொட்டிகள் முழுவதுமாக நிரம்பி உள்ளதால் பொதுமக்கள் கழிவறையை பயன்படுத்த முடியாமல் உள்ளதாலும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் சூழல் உள்ளதாலும் மேற்கண்ட கழிவறைகளின் நச்சுத் தொட்டிகளை செப்டிக் டேங் கழிவறை சுத்தம் செய்யும் வாகனம் கொண்டு கழிவு நீரை சுத்தம் செய்ய உத்தேச செலவு ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3870/12/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:730<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி